**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.301/2025</u>**

CNR No. TNTL06-000382-2025

1. சண்முகத்தம்மாள்
2. சுப்பம்மாள் ... வாதிகள்

–எதிர்–

1. தமிழ்நாடு அரசு அதன் திருநெல்வேலி
மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்
2. தமிழ்நாடு அரசு அதன் பாளையங்கோட்டை
வட்டாட்சியர் மூலம்
3. ஆறுமுகம்
4. கோமதி ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு 12.08.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 21.07.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு உட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, கடந்த 07.08.2003 தேதியில் இறந்து போன சுடலைமுத்து என்பவருக்கு வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் கோரியும், கடந்த 07.08.2003ம் தேதியில் இறந்துபோன சுடலைமுத்து என்பவருக்கு வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் சட்டப்படியான வாரிசுகள் என குறிப்பிட்டு வாதிகளுக்கு 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வழங்கும் படிக்கு 2ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் இந்த வழக்கு செலவு தொகை கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்:–**

2.1. வாதிகளின் தாயார் கருப்பாயி என்பவருக்கும், சுடலைமுத்து என்பவருக்கும் திருமணம் நடைபெற்று, மேற்படி திருமணத்தின் பயனாக வாதிகள் பிறந்துள்ளார்கள். அதன் பின்னர் வாதிகளின் தாயார் கருப்பாயி உடல்நலக் குறைவு காரணமாக சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பு வாதிகளை மட்டும் வாரிசாக விட்டு விட்டு காலமாகி விட்டார். அதன் பின்னர் சுடலைமுத்து பிச்சம்மாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து, அதன் பயனாக 3, 4 பிரதிவாதிகள் வாரிசாக பிறந்துள்ளார்கள். இந்நிலையில், மேற்படி பிச்சம்மாள் என்பவர் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டார்.

2.2. மேற்படி சுடலைமுத்து என்பவர் கடந்த 07.08.2003ம் தேதி வாதிகளையும், 3, 4 பிரதிவாதிகளையும் வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டார். மேற்படி சுடலைமுத்து என்பவரின் தாயார் கசமாடி கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பும், அவருடைய தகப்பனார் சுப்பிரமணியன் கடந்த 70 ஆண்டுகளுக்கும் முன்பு இறந்து விட்டனர். இறந்து போன சுடலைமுத்து பெயரில் உள்ள சொத்துக்களை

பாகப்பிரிவினை செய்து, பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி 2ம் வாதி, 2ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கோரி விண்ணப்பம் செய்த மனுவானது இறந்து போன சுடலைமுத்து என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்ற காரணத்தை குறிப்பிட்டு நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளும் படி நிராகரிக்கப்பட்டது. எனவே, வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் காலம் சென்ற சுடலைமுத்து என்பவரின் வாரிசுகள் என விளம்புகை செய்யக் கோரியும், வாதிகளுக்கு 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:–</u>**

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தமிழக அரசின் முதன்மை செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை, வருவாய் நிர்வாக பிரிவு, சென்னை அவர்களின் 29.09.2022 தேதியிட்ட அரசாணை எண்.478 படி வாரிசு சான்றிதழ் விண்ணப்ப மனு நிராகரிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட கோட்டாட்சி தலைவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும். உரிமையியல் நீதிமன்றத்தை நாட இயலாது. எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:–</u>**

இறந்து போன சுடலைமுத்துவின் முதல் மனைவி கருப்பாயி என்பவரின் மகள்கள் தான் வாதிகள் ஆவார்கள். மேற்படி வாதிகளின் தாயார் கருப்பாயி உடல்

நலக்குறைவினால் 65 ஆண்டுகளுக்கு முன்பு காலம் சென்ற பின் 3, 4 பிரதிவாதிகளின் தாயாரான பிச்சம்மாள் என்பவரை சுடலைமுத்து 2ம் திருமணம் செய்து அதன் மூலம் 3, 4 பிரதிவாதிகள் பிறந்துள்ளார்கள். இந்நிலையில், 07.08.2003 ல் இறந்து போன சுடலைமுத்துக்கு வாதிகளம், 3, 4 பிரதிவாதிகளும் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி சுடலைமுத்துவின் 2ம் மனைவி பிச்சம்மாள் காலம் சென்றுவிட்டார். எனவே, வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் இறந்து போன சுடலைமுத்துவின் வாரிசுகள் என்று விளம்புகை செய்தும், அதன் அடிப்படையில் வாரிசு சான்று வழங்க வேண்டுமெனக்கூறி வாதிகள் கோரிய பரிகாரத்தை வழங்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

<u>**4. வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் இரு தரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தீர்மானிக்க கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:–**</u>

1. கடந்த 07.08.2003 ம் தேதியில் இறந்து போன சுடலைமுத்து அவர்களுக்கு, வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் பெற வாதிகள் உரிமையுடையவர்களா?
2. கடந்த 07.08.2003 ம் தேதியில் இறந்து போன சுடலைமுத்து அவர்களுக்கு வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் வாரிசுகள் என வாரிசு சான்றிதழ் 2ம் பிரதிவாதி வழங்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் பெற வாதிகள் உரிமையுடையவர்களா?
3. வாதிகளுக்கு வேறு ஏதேனும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

5. வாதிகள் தரப்பில், 2ம் வாதி திருமதி.சுப்பம்மாள் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. திருமதி.ஜெயா

(திம்மராஜபுரம் குரூப் கிராம நிர்வாக அலுவலர்) என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்று ஆவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7. வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மூலம் வாதிகள் இறந்து போன சுடலைமுத்து என்பவரின் வாரிசுகள் என நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, இவ்வழக்கை அனுமதிக்க வேண்டுமென வாதிடப்பட்டது. 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் கூறியுள்ள சங்கதிகள் உண்மையானது என்றும், எனவே, வாதிகள் கோரிய பரிகாரங்களை வழங்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

8. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் தரப்பில், வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் இறந்து போன சுடலைமுத்து என்பவரின் வாரிசுகள் என்பதை நிரூபிக்கவில்லை என்றும், வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட கோட்டாட்சி தலைவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**<u>எழுவினா 1 க்கான தீர்வு</u>**

9. வாதிகள் தரப்பில், காலம் சென்ற சுடலைமுத்து என்பவர் முதலில் கருப்பாயி என்பவரை திருமணம் செய்து, அதன் பயனாக வாதிகள் பிறந்ததாகவும், அதன் பின்னர் மேற்படி கருப்பாயி என்பவர் உடல் நலக்குறைவால் காலம் சென்ற பின்னர், பிச்சம்மாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து, அதன் பயனாக 3, 4 பிரதிவாதிகள் பிறந்துள்ளார்கள் என்றும், இந்நிலையில், மேற்படி 3, 4 பிரதிவாதிகளின் தாயாரான பிச்சம்மாள் என்பவர் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு காலம் சென்று விட்டார் என்றும், ஆனால் மேற்படி சுடலைமுத்து என்பவர் கடந்த 07.08.2003 ம் தேதி காலம் சென்று விட்டதாகவும், மேற்படி சுடலைமுத்து என்பவரின் தந்தை மற்றும் தாயார் அவரது இறப்பிற்கு முன்னரே இறந்து விட்டதாகவும் வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை உறுதியூட்டும் வகையில் வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

10. வா.சா.2 / கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில், சுடலைமுத்து என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றும், முதல் மனைவி பெயர் கருப்பாயி, இரண்டாவது மனைவி பெயர் பிச்சம்மாள் என்றும், முதல் மனைவிக்கு சண்முகத்தம்மாள், சுப்பம்மாள் என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்றும், இரண்டாவது மனைவி மூலம் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளதில், ஒரு பெண்குழந்தை இறந்து விட்டது என்றும், ஆறுமுகம், கோமதி என்ற குழந்தைகள் உள்ளனர் என்றும், முதல் மனைவி கருப்பாயி இறந்த பின்னர் இரண்டாவது பிச்சம்மாள் என்பவரை சுடலைமுத்து திருமணம் செய்து கொண்டார் என்றும் வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் வழக்கின் சங்கதிகளை உறுதியூட்டும் வகையிலும் கிராம நிர்வாக அலுவலரான வா.சா.2 ம் சாட்சியம் அளித்துள்ளார்.

11. வா.சா.ஆ.3 ஆன இறப்பு சான்றிதழை பரிசீலனை செய்கையில், சுடலைமுத்து என்பவர் கடந்த 07.08.2003ம் தேதி இறந்து விட்டார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.4ஐ பரிசீலனை செய்கையில் 2ம் வாதி வாரிசு சான்றிதழ் தரக் கோரி 2ம் பிரதிவாதி அலுவலகத்திற்கு மனு செய்துள்ளார் என்பதும், மேற்படி மனுவானது, இறந்து போன நபருக்கு இரண்டு மனைவிகள் இருந்ததாக விசாரணையில் தெரிய வந்ததால் வாரிசு சான்றிதழ் வழங்க முடியாது எனக் குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

12. மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், சுடலைமுத்து என்பவர் இறந்து விட்டார் என்பதை வா.சா.1 மற்றும் வா.சா.2ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.4 ஆன இறப்பு சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ஐ பரிசீலனை செய்கையில், அது 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2ஐ பரிசீலனை செய்கையில், அது 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை என தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.2ல் 2ம் வாதியின் தந்தை பெயராக சுடலைமுத்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோரின் சாட்சியத்தின் வாயிலாக, மேற்படி சுடலைமுத்து என்பவரின் முதல் மனைவி கருப்பாயி இறந்த பின்னர் தான் இரண்டாவதாக பிச்சம்மாள் என்பரை திருமணம் செய்துள்ளார் என தெரிய வருகிறது. அதனால் மேற்படி பிச்சம்மாள் மற்றும் சுடலைமுத்துவிற்கும் பிறந்த 3, 4 பிரதிவாதிகள் காலம் சென்ற சுடலைமுத்துவின் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். மேலும், மேற்படி சுடலைமுத்து என்பவரின் இரண்டு மனைவிகளான கருப்பாயி மற்றும் பிச்சம்மாள் ஆகியோரும், சுடலைமுத்து என்பவரின் பெற்றோர்களும் இறந்து விட்டார்கள் என்பது வாதிகள் தரப்பில் வாய்மொழி

சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதை பிரதிவாதிகள் மறுத்திடவில்லை.

14. எனவே, மேலே கண்ட விவாதங்களின் அடிப்படையில், வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மட்டுமே தற்போது காலம் சென்ற சுடலைமுத்து என்பவரின் வாரிசுகளாக உள்ளார்கள் என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8ன் கீழ் இந்த வழக்கின் வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மட்டுமே காலம் சென்ற சுடலைமுத்து என்பவரின் சட்டப்பூர்வமான வாரிசுகள் என நிரூபித்துள்ளதால் எழுவினா 1 வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 2 க்கான தீர்வு :–</u>**

15. வாதிகள் தங்களது வழக்குரையில் 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வாதிகளுக்கு வழங்க முடியாது என சொன்னதாக கூறியுள்ள சங்கதிகளை உறுதியூட்டும் வகையில் 1ம் வாதி/வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேலும், 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் வழங்கப்பட்ட வா.சா.ஆ.4 ஐ பரிசீலனை செய்கையில், சுடலைமுத்து என்பவருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாக தெரிய வருவதால் வாரிசு சான்றிதழ் வழங்க இயலாது என குறிப்பிட்டு மேலெழுத்து செய்யப்பட்ட சான்றிதழை வழங்கியுள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. மேலே கண்ட எழுவினா 1–ற்கு வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் காலம் சென்ற சுடலைமுத்துவின் சட்டப்படியான வாரிசுகள் என்று தீர்வு கண்டுள்ளதால், 2ம் பிரதிவாதி, வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் வழங்கிட வேண்டுமென்று எழுவினா 2 வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா 3 க்கான தீர்வு :–</u>

16. இவ்வழக்கில் தரப்பினர்களுக்கிடையே எடுக்கப்பட்டுள்ள கட்சி, மற்றும் மேலே தீர்மானிக்கப்பட்டுள்ள எழுவினா 1 மற்றும் 2 ஐ கருத்தில் கொண்டு இவ்வழக்கின் தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று மேற்கண்ட எழுவினாவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**இறுதியாக, இவ்வழக்கானது கீழே கண்டவாறு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(அ) கடந்த 07.08.2003 தேதியில் இறந்து போன சுடலைமுத்து என்பவருக்கு வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(ஆ) கடந்த 07.08.2003 ம் தேதியில் இறந்துபோன சுடலைமுத்து என்பவருக்கு வாதிகளும், 3, 4 பிரதிவாதிகளும் சட்டப்படியான வாரிசுகள் எனக் குறிப்பிட்டு 2 ம் பிரதிவாதி இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(இ) வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA
Judgment uploaded on 04.08.2026.
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.08.04 19:01:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்** -

வா.சா.1 – திருமதி.சுப்பம்மாள் (2ம் வாதி)

வா.சா.2 – திருமதி.ஜெயா (கிராம நிர்வாக அலுவலர்)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** -

வா.சா.ஆ.1 – 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை – அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்ட நகல்.

வா.சா.ஆ.2 – 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை – அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்ட நகல்.

வா.சா.ஆ.3 – சுடலைமுத்து என்பவரின் இறப்பு சான்றிதழ் – இணையதள பதிவிறக்க நகல்.

வா.சா.ஆ.4 – 2ம் வாதி, 2ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனுவானது நிரகாரிக்கப்பட்டதற்கான மனு – கணினி பதிவிறக்க நகல்.

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :- இல்லை

VENKATACHALAM MONIKA
Judgment uploaded on 04.08.2026.
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.08.04 19:02:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண்.301/2025
சீரான/ வரைவு தீர்ப்புரை
04.08.2026